மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். நமது அரசானது பட்டா வழங்கப்படுவதை நிறுத்துவதற்கு முன்பாக, பல ஏழை மக்களுக்கு பட்டாக்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பட்டாக்களினால் அவர்கள் வீடு கட்ட முடியாமல் துன்பப்படுகிறார்கள். அவர்களுக்குக் கண்டிப்பாக வீடு கட்ட அனுமதி வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும், மேலும் புதிய சட்டத் திருத்தத்தின்கீழ் பல கடுமையான விதிகள் இருப்பதனால் பல ஏழை, நடுத்ததர மக்கள் வீடு கட்டாமல் தவித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையிலே, அரசு உடனடியாக கைட்லைன்ஸை அறிவித்து அவர்கள் வீடு கட்ட அனுமதி வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பெருமனதுடன் அவற்றை ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 122, திரு.எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு உணவு அமைச்சர்.

122—

ஆலங்குளம் ஒன்றியம், மரியதாய்புரத்தில் நியாயவிலைக் கடை அமைத்தல்.

***20642**— திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மரியதாய்புரம் கிராமத்தில் நியாய விலைக்கடை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் மரியதாய்புரம் கிராமத்தில் நியாயவிலைக் கடை அமைத்துக் கொடுக்க சாத்தியம் இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ரேஷன் கடை என்பது, எங்கள் ஊரில் மரியதாய்புரம் கிராமத்திலிருந்து 21/2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பரங்குன்றாபுரத்தில் சென்று ரேஷன் வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. அது மட்டுமல்ல; இதுமாதிரி பல ஊர்களில்—நெல்லைதிருத்து, கண்ணாடிகுளம், அருணாசலபேரி, ஆலடிபட்டி, துறையூர் போன்ற கிராமங்களில் எல்லாம்—நலிந்த பிரிவினர்கள் எல்லாம் ஒரு ஊரிலிருந்து ஒரு ஊருக்குச் செல்லும்போது, ரேஷன் வாங்கும்போது சில பிரச்சினைகள் வருகின்றன. பொதுமக்கள் போகமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான அரிசி போன்றவற்றை அந்தக் கடைகளில்

1994 மார்ச் 29]

கொடுக்கமால் இருப்பது, கடையைச் சீக்கிரமாக மூடிவிடுவது போன்ற பிரச்சினைகள் எல்லாம் பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. இவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் அந்தந்த ஊர்களிலே ரேஷன் கடை வைப்பதற்கு அங்கே கட்டிடங்கள் எல்லாம் தருகிறார்கள். அதுமட்டுமல்ல; அங்கே கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளையும், அதற்கு என்ன செலவுகளோ அவற்றையும் அந்தப் பொது மக்கள் ஏற்றுக்கொள்வதாகச் சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஆங்காங்கே வைத்தால் அந்த பொது மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதனால், அதை அரசு பரிசீலனை செய்து, எங்களுக்கு இந்த ரேஷன் கடைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப் போன்று ஒவ்வொரு கிராமப் பகுதியிலேயும், குக்கிராமங்களிலேயும் ரேஷன் கடைகளை நடத்துவது என்பது இயலாத காரியம். பொதுவாக வருவாய் கிராமங்களில் ரேஷன் கடைகளை நடத்த வேண்டும் என்று தொடங்கப்பெற்றது. அப்படி தொடங்கிய பிறகு, அதற்குப் பிறகு இந்த துணை ரேஷன் கடைகளும் வழங்கலாம் என்று பல இடங்களிலே அந்தச் சூழ்நிலையையொட்டி உருவாக்கப்பெற்று இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு குக்கிராமத்திலேயும் நாம் ரேஷன் கடைகளை நடத்துவது என்பது இயலாது. இன்றைக்கு சுமார் 800 குடும்ப அட்டைகள் இருந்தால் ஒரு ரேஷன் கடை தொடங்கலாம் என்று நிர்ணயித்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற இந்த மரியதாய்புரம் கிராமத்தைச் சார்ந்தவர்கள் பரங்குன்றாபுரம் நியாய விலைக் கடைகளிலே அத்தியாவசியப் பொருள்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பரங்குன்றாபுரம் பகுதியில் 441 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அந்தக் கடையிலே வாடியூர் பகுதியைச் சேர்ந்த 339 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டிருந்தன. அவர்கள் 4 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அதிலே 339 குடும்ப அட்டைகளுக்காக வாடியூர் கிராமத்திலே ஒரு தனியாக பகுதிநேர நியாயவிலைக்கடை அமைக்கப்பட்டுள்ளது. இப்போது வாடியூர் பகுதிக்கு 339 போனதற்குப் பிறகு, 441 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதிலே மரியதாய்புரம் பகுதியில் 220 குடும்ப அட்டைகள்தான் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பகுதிநேரக் கடை என்றால் வாரத்தில் 3 நாட்கள் வழங்குவதற்காக நாம் உருவாக்குகிறோம். அதற்கென்று தனி பணியாளர் நியமிக்கப்படுவது இல்லை. ஆகவே, இப்போதே பிரித்திருக்கிற ஒரு சூழ்நிலையில் இன்னொரு பகுதிக்கு இன்னொரு கடையாகவும் பிரித்தால் வாரத்தில் 3 நாட்கள் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவேதான் இந்தச் சூழ்நிலையில் 220 குடும்ப அட்டைகளுக்காக இன்னொரு பகுதி நேரக் கடையை நாம் பிரிக்க முடியாத சூழ்நிலையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடைகள் பிரித்துக்கொடுப்பதற்கு செலவினம் அதிகமாகும் என்பதைப்போல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால் பல கிராமங்களில் இந்த கம்யூனல் கிளாஷ் என்று சொல்லக்கூடிய அளவுக்கு சில நலிந்த பிரிவினர்கள் சில ஊர்களுக்குச் செல்ல முடியாமல் இருக்கிறது. இந்த மாதிரி ஊர்களுக்கு நீங்கள் பார்த்து அதைப் பிரித்துத் தனிக்கடைகளாகக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா? அதைப்போல ரேஷன் கடைகளில் இன்றைக்கு 12 கிலோ அரிசிதான் நீங்கள் கொடுக்கிறீர்கள். ஒரு குடும்பத்தில் 5 நபர்கள் இருந்தாலும் நீங்கள் அவ்வளவுதான் கொடுக்கிறீர்கள். அத்தனை நபர்களுக்கும், இன்றைக்கு கேரளா, ஆந்திராவைப் போல அரிசி ஒவ்வொரு நபருக்கும் தகுந்தாற்போல் நீங்கள்..................(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தனிக் கேள்வி போடவும். இந்தக் கேள்வி ஒரு ஊரிலுள்ள ரேஷன் கடையைப் பிரிப்பது பற்றியது. பொதுவாக 12 கிலோ போடுவது, மற்ற மாநிலங்களில் இவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதெல்லாம் பொது விவாதத்தில் பேச வேண்டிய விஷயங்கள். முதல் பகுதிக்கு மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோல், சில விசேஷ சூழ்நிலைகளினால், விசேஷ காரணங்களினால் அங்கே எல்லாக் கிராமங்களுக்கும் இணைத்து நடத்தப்படுகின்ற அந்தக் கடைகளுக்கு வர முடியாத நிலை இருக்குமானால் அந்த நிலைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்தால், அதையொட்டிய சிறப்பு முடிவை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 123, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

123—

பணகுடி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்.

13804— திருமதி ரமணி நல்லதம்பி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) ராதாபுரம் தொகுதி, பணகுடி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?